[15th December 1961

THE HON. SRI M. A. MANICKAVELU : பாலாற்றங்கரை மாத்திரம் அல்ல; செய்யாற்றங்கரையில் உள்ள கிராமங்களும் அநேகமாக இருக்கின்றன. இந்த திட்டமே மத்திய சர்க்கார் திட்டம்; அவர்கள் வேண்டியதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும், எந்தெந்த வேலைகள், "ஸ்பில் ஓவர்", முடியா விட்டாலும், அவற்றை முடிக்கிற உரிமை நமக்கு உண்டு. இந்த திட்டத்தின் கீழ் இல்லாவிட்டாலும், தனியாக ரூரல் வாட்டர் சப்ளை திட்டத்தின் கீழ் எடுக்கலாம். இந்த திட்டம் இல்லை என்றால், அதற்காக குடிதண்ணீர் வசதி செய்யமாட்டார்கள் என்பதில்லை.

Cement

* 2408 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government have any proposal to allow the Panchayat Presidents and Block Development Officers to issue permits for the purchase of cement instead of Revenue officials?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI M. S. SELVARAJAN : ஸார், சிமண்ட் பர்மிட்டுகள் மூலம் கொடுப்பதில் சிரமங்கள் இருப்பது சர்க்காரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறதா? அப்படியென்றால், சிரமத்தைப் போக்க, பரிசிலனை செய்திருக்கிறதா? என்ன வழி செய்யப்பட்டிருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது சிமெண்ட் விநியோகம் செய்வதில் பர்மிட் கொடுத்து, 80 சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்றும், 20 சதவிகிதம் ஸ்டாகிஸ்டுகள் மாமூலாக வழங்குகிறவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அதை அரசாங்கத்திலேயே பூராவையும் பர்மிட் மூலம் கொடுக்கலாமா என்று பரிசிலனை செய்கிறோம். கனம் அங்கத்தினரின் முதல் கேள்விப்படி, பஞ்சாயத்து போர்டு ப்ரெஸிடெண்ட், டெவலப்மெண்ட் ஆபீஸர் இவர்களிடம் கொடுத்தால், அவர்கள் பெயர்தான் கெட்டுப்போகும். வேறு வழியில் கொடுக்க வேண்டும்.

Scholarships to students

* 2409 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1957 முதல் 1960 வரை நமது ராஜ்யத்தில் மாணவர்களுக்கு கல்விச் சலுகை, ஸ்காலர்ஷிப் முதலியவை எந்த அளவுக்கு அளிக்கப்பட்டது?

(இ) ஹரிஜன மாணவர்கள், பிள்தங்கிய மாணவர்கள் எவ்வளவு பேர்?

(உ) மத்திய சர்க்கார் உதவி எவ்வளவு? ராஜ்ய சர்க்கார் உதவி எவ்வளவு?